# லா.ச.ராமாமிருதம் படைப்புலகம்

அபி



# லா.ச.ராமாமிருதம் படைப்புலகம்

தொகுப்பாசிரியர்
அபி

கலைஞன் பதிப்பகம்
10 கண்ணதாசன் சாலை
தியாகராயநகர் நகர்
சென்னை–600 017.

# லா.ச.ராமாமிருதம்

# படைப்புலகம்

லா.ச. ராவின் படைப்புகளை முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் பார்த்ததற்கும், அதே படைப்புகளை இப்போது பார்ப்பதற்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் தெரிகின்றன. அப்போது கண்ணில் படாத இடுக்குகள், இருட்டுகள், முக்கியம் என்று தோன்றாதவை, இப்போது அற்புதம் எனத் தெரிகின்றன. அப்போது பார்த்த விகாரங்கள், வக்கிரங்கள் இப்போது ஆன்மிகத்தின் நடையங்களாகக் கிடைக்கின்றன. அப்போது சொல்லின் அழகுகளை ருசிக்கத் தெரிந்திருந்தது. இப்போது சொல்லின் ஆளுமை, அதன் ஆதிக்கம், அதன் புழக்கப் பிரதேசங்களின் விரிந்த நிலக்காட்சி தெரிகிறது. வருஷங்களோடு பேசிக்கொண்டே வாசகனையும் வளர்த்துத் தானும் வளர்ந்து கொள்ளும் எழுத்து இது. இதன் உயிர்ப்புக்கு மட்டுமே லா.ச.ரா பொறுப்பாளி. இதன் வளர்தலுக்குப் பொறுப்பு இதுவேதான். சூழலில் நிகழும் சலனங்கள், எண்ணங்கள் உணர்வுகளுக்குத் தன் எண்ணற்ற தமனிகளில் ஓட வசதிகொடுத்துக் கொண்டு காலந்தோறும் வளர்கிறது. வாழ்க்கையை அதன் ஸ்தூல வடிவிற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அதன் சூட்சும வடிவத்தைப் பார்க்கும் எந்த நல்ல எழுத்துக்கும் விதிக்கப்பட்டிருப்பது தடையற்ற வளர்ச்சி.

அரூபக்கலையின் பாதிப்பு உடனடியாகவோ அதிரடியாகவோ இருப்பதில்லை. அது நெருடலாகி, நீடித்திருப்பது அமளிகளின் வழியே மௌனத்திற்கு, உணர்ச்சிகளின் வழியே உட்குவிதலுக்கு, குணாதிசயங்களின் வழியே குணமற்ற அரூபத்திற்கு வழியைச் சுட்டிக் காட்டிய வரையில் லா.ச.ராவுக்குத் தமிழ் இலக்கிய உலகில் தனித்த இடம் உண்டு. 'தாக்ஷாயணி'யில் அவள் அவனிடம் சொல்கிறாள், "எப்படியும் நீங்கள் ஆச்சரியமான நிமிஷங்கள் படைத்தவர்" என்று. ஆழமான ஒரு முழுப்பார்வையில் லா.ச.ராவிடம் வாசகன் சொல்வதும் இதுவே.

- அபி

000023